அறிந்து கொள்வதற்கு மாநில அரசுகளோடு கலந்து பேச வேண்டும். அதாவது கன்சல்டேஷன், கன்சன்ட் இல்லை என்றாலும் கன்ஸல்ட் என்ற முறையில் நிலக்கரி, எண்ணெய் விலையை உயர்த்துவது, இரயிற் மற்றும் கப்பல் சரக்குக் கட்டணத்தை உயர்ந்துவது போன்ற நேரங்களிலாவது, மாநில சர்க்கார்களுடைய பண நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாநில அரசுகளை கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அண்மையில் நிதிக் குழுவிலே கூட மாநில அரசு சார்பாக இதை வற்புறுத்தியிருக்கிறோம். மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் இப்படி விலையை உயர்த்தினால் மாநில அரசுக்கு வேறு வழியில்லாமல் தன்னுடைய நிதியை மத்திய அரசுக்கு கொடுத்து விட்டு, அதைஈடு செய்ய கட்டணங்களை உயர்த்தவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரள மாநிலத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரம்

3— *(வினா எண். 20836) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983—ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரளா மாநிலத்திற்குத் தமிழநாடு அரசு மின் விநியோகம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) சப்ளை செய்யப்பட்ட மொத்த மின்சாரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ;

(அ) ஆம்.

(ஆ) 1983-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிலவிய மின் நெருக்கடியின் காரணமாக கேரளம் கேட்டதற்கிணங்க மின்சாரம் வழங்கப்பட்டது.

(இ) 11.543 மில்லியன் யூனிட்டுகள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கேரள மாநிலம் கேட்டபோது நம்முடைய அரசும் அவர்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறது. அதைப் போன்று நாமும் கேரள மாநிலத்திலிருந்து வாங்கியிருக்கிறோம். நாம் அவர்களுக்கு யூனிட்டுக்கு என்ன விலைக்கு தந்திருக்கிறோம். அவர்கள் நமக்கு என்ன விலைக்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பெரும் பாலும் கேரளத்திலிருந்துதான் நாம் பெறுவது வழக்கம். அவர்களுக்கு நாம் தருவது மிகமிக குறைவு. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக கேரளத்தினுடைய நிலைமை நமக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதிகமாக தரக்கூடிய அளவில் இல்லை. இருந்தாலும் நாமும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை நாம் பரிவர்த்தனை செய்கின்ற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 35. காசு 11-4-1984 வரையில் இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் அதன் பிறகு என்ன விலை என்பதை பேசி முடிவு செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் தரும் நிலையிலும் இல்லை, நாம் பெறும் நிலையிலும் இல்லை. அதனால் அதுபற்றி இப்போது நாம் பேச வேண்டியதில்லை.

(முற்பகல் 9—10)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கொடுத்த மின்சாரத்திற்கு கேரள அரசாங்கத்திடமிருந்து நம்முடைய வாரியத்திற்கு வரவேண்டிய பணம் வந்து விட்டதா? அதே போன்று நம்முடைய அரசு கேரள மாநிலத்திற்கு கொடுக்க வேண்டிய பாக்கி உள்ளதா? ஏன் என்றால் பொது நிறுவனங்கள் குழுவிலே பார்க்கின்றபோது ஆந்திரா, கேரளா, போன்ற மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய பணம் பல ஆண்டுக்காலமாக வசூலிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதை வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேரளம் நமக்கு இதன் அடிப்படையில் தரவேண்டியதில்லை. ஏன் என்றால் 374 மில்லியன் யூனிட்டுகள் 1982-83 நமக்குத் தந்தார்கள். நாம் அவர்களுக்குத் தந்தது 28.7 மில்லியன் யூனிட்டுகள் தான் அண்டை மாநிலங்களோடு கொடுக்கல் வாங்கல் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். நாம் எவ்வளவு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு நமக்குக் கொடுக்க வேண்டும் என்ற விவரத்திற்கு தனி கேள்வி போட்டால் பதில் தருவதற்கு இயலும். சில சமயங்களில் நாமே அதிகமாகக் கூட கொடுக்க வேண்டியது வந்தாலும் வரலாம்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள ஒரு சிமென்ட் ஆலை கேரளாவிலிருந்து நேரடியாக மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக சிமென்ட் கொடுப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ப நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற்றுக் கொண்டு அதற்கு பதிலாக தமிழ்நாட்டிலிருந்து அலுமினியம் தருவதற்காக அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மத்திய அரசு ரத்து செய்தது. அதைப் போலவே இப்போது மின்சார பரிமாற்றத்திற்கும் மத்திய அரசின் அனுமதி தேவை இருக்கிறதா? அனுமதியில்லாமல் இந்த பரிமாற்றம் நடைபெற

மீண்டும் கேரள அரசாங்கத்திடமிருந்து மின்சாரம் பெறவும் நாம் அலுமினியம் தருவதற்கும் இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் தலைவர் அவர்களே, இதற்கு இந்திய அரசின் அனுமதி தேவையில்லை.

திரு. ச. செம்மலை மாண்புமிகு பேரவைத் தலைவர்களே இப்படி ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மின்சாரம் பரிவர்த்தனை செய்கிறபோது மின்சாரத்திற்காக பற்றாக்குறை மாநிலங்கள், உபரி மாநிலங்களுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. அதேபோல் சில சமயங்களில் தமிழ்நாட்டைப் போன்ற பற்றாக்குறை மாநிலங்கள் உபரி மாநிலங்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சாரம் கொடுக்கிறபோது, குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. எனவே இந்த மின்சாரம் பரிமாற்றம் செய்து கொள்கிற போது ஒரே சீரான விலையை நிர்ணயம் செய்ய மத்திய அரசை நமது அரசு வற்புறுத்தி வந்ததே, அப்படி சீரான விலை நிர்ணயம் செய்வதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே பொதுவாக இயற்கை வளங்கள் குறைந்த தமிழ்நாடு போன்ற பற்றாக்குறை மாநிலங்களுக்கு மின்சாரம் தருகிறபோது ஒரு விஞ்ஞான அடிப்படையில் அதை அமைக்க வேண்டும் என்று மின்சாரத்துறை அமைச்சர்கள் இந்தியா முழுவதற்கும் ஒரு சீரான கட்டணத்தை அவர்கள் வசூலிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இவைகள் எல்லாம் ஆலோசனைகளாக இருக்கிறதே தவிர, முடிவுகள் எடுக்கப்படவில்லை.

தெரு விளக்குகளில் 'Thermister' என்னும் சாதனத்தைப் பொருத்தும் திட்டம்.

*101-*வினா எண் 18992:* திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— *(அ)* தமிழகத்தில் தெரு விளக்குகள் பியூஸ் போவதைக் குறைத்திட ஒவ்வொரு விளக்கிலும் ''Thermister' எனும் சாதனத்தைப் பொருத்துவதைப் பற்றி மின்துறை ஆய்வு நடத்தியதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: *(அ, ஆ)* ஒரு மாதிரி 'தெர்மிஸ்டர்'—ஐப்பயன்படுத்தி ஆய்வு செய்ததில், இதனால் மின் இழப்பு ஏற்படுவதுடன் மின்விளக்கும் சீரின்றி நிலையற்ற ஒளியுடன் எரிந்தது, முறையான வெளிச்சம் தர இது உகந்ததல்ல. எனவே இச்சாதனத்தைப் பயன்படுத்துவது உசிதமல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது.